திருவேகம்பரந்தாதி

சிறப்புப்பாயிரம்

கங்கையு மலரின் மங்கையும் பரசுங்
காமநோக் கம்மைவண் டங்கை
கொங்கைகண் ணெழுங்கத் தழுவலு முழுதுங்
குழைந்தருள் கம்பரந் தாதி
சங்கையின் மும்மைத் தமிழ்ப்புல வோர்க
டமக்கொரு காட்டதா வமைத்தான்
செங்கைகள் கூப்பித் தவர்புகழ் துறைசைச்
சிவஞான முனிவரன் மாதோ.

உ

திருச்சிற்றம்பலம்

திருவேகம்ப ரந்தாதி

நூல்

கருமங்கை யார மருமத்த ரேத்துசெங் காந்தளைரி
கருமங்கை யார மருமத்தர் வாழ்கச்சி போலவெப்பாங்
கருமங்கை யார மருமத்தர் வாய்மை கதிர்ப்பச்சென்ற
கருமங்கை யார மருமத்த முங்கடந் தெய்தலென்றே. க

என்பங்கம் பங்கம் படச்சு ழெனிலெங்குஞ் செல்சரணாக்
கென்பங்கம் பங்கம் பதித்த பிரான்கச்சி யெய்துவம்வா
வென்பங்கம் பங்கம் பிகையுறச் சேர்த்தவ னெம்பெருமா
னென்பங்கம் பங்கம் பியாவண்ண மேத்துவ மேழைநெஞ்சே. உ

சேகரந் தோய முடித்தோ யிருள்சிந்தை யார்க்கப்பரி
சேகரந் தோயம லாகச்சி யேகம்ப சேரலர்நஞ்
சேகரந் தோயன லாவென்று சிந்தைசெய் யாதமலச்
சேகரந் தோயம னாள்வருங் காலையென் செய்குவரே. ௩

குவலைய மாமை விழியார் மயக்கிற் கொட்கும்புலையேன்
குவலைய மாமை யுருவெனக் காலன் குறுகிலென்செய்
குவலைய மாமை தருங்கச்சி யேகம்ப கோளரவா
குவலைய மாமையி னோடணி யாக்கொண்ட கொள்கையனே. ௪

கைக்கடக் கும்பக் களிறுமை வாயிலுங் கைவசஞ்செய்
கைக்கடக் கும்பக்க மேகவொட் டாதெமர் காள்பொன்னால
கைக்கடக் கும்பக்க பூஞ்சினை மாவுறை கம்பன்வெண்ண
கைக்கடக் கும்பக் கதிர்முலை பாகனைக் கண்ணுமினே. ௫

மின்னலங் காரம்பு பெய்யா துறமிக் கிராசிகடம்
மின்னலங் காரக ளிற்பினு மென்மின்ன னூர்குமின்கு
மின்னலங் காரம் பெறநடஞ் செய்வியன் கச்சியைச்சேர்
மின்னலங் காரப் பணியான்கம் பந்தொழு வீரன்பரே. ௬

அன்ப ரவைக்களஞ் செல்லேன்கம் பம்பணி யாதபுலை
யன்ப ரவைக்களந் திமழு வோயென் றரற்றித்துழா
யன்ப ரவைக்களர் தன்புசெய் யேன்மெய் யறிவுகுறி
யன்ப ரவைக்களங் கத்தேனெவ் வாறருள் கூடுவதே. ௭

தேங்கடி யாரர வார்சடை யார்திருக் கம்பந்தொழு
தேங்கடி யாரர வந்திகழ் காஞ்சியிற் சென்றுசிவந்
தேங்கடி யாரர வோசை செவிமடுத் தேமினிமுந்
தேங்கடி யாரரர் தைப்படுங் கும்பியிற் செல்வழிக்கே. ௮

கேதனக் கேதன மன்வரி லச்சங் கெடுத்தருள்சங்
கேதனக் கேதன வல்லார் மதிகெடக் கட்டியரைக்
கேதனக் கேதன மாமுமை பாற்கிளர் வோன்கச்சிநி
கேதனக் கேதன வானன்கம் பந்தொழக் கேடிலையே. ௯

கேட்டைய னுமய மாங்கம்பங் கிட்டவொட் டாதமதன்
கேட்டைய னுமயன் மீறச்செய் திங்கைக் கெடுத்தியெனக்
கேட்டைய னுமயங் கேலென வாண்டனன் கேழரியாங்
கேட்டைய னுமய னுமறி வாரவன் கீர்த்திகளே. ௰

திகழு மலத்தகத் தாளா டொழக்கம்பஞ் சேர்ந்துறைசோ
திகழு மலத்தகப் பட்டுழல் குண்டரைச் சேர்த்திடுமூர்த்
திகழு மலத்தகத் தெங்கோன்றன் கோன்சிவ ஞானமளித்
திகழு மலத்தகட் டாள்வாயென் பார்க்கருள் செய்திடுமே. ௧௧

செய்யவை யம்புயம் வைத்தாளும் வேந்தர் திருவுங்கைப்பச்
செய்யவை யம்புய மன்போலு நோக்கியர் தீமையறச்
செய்யவை யம்புய மார்கச்சி யேகம்பஞ் சென்றுபத்தி
செய்யவை யம்புய னோர்களத் தாயெங்கள் சிற்பரனே. ௧௨

பரவாத வந்தனை யன்போல் வளர்த்துப் படித்துளறும்
பரவாத வந்தனை யந்தோ விடேனினிப் பார்வெறுந்தா
பரவாத வந்தனை செய்யடி யார்தம் பணிசெயென்றம்
பரவாத வந்தனை யிந்தனை யேபழங் கம்பத்தனே. கரு

பத்திக் கணங்கண மாநின்று போற்றும் பழவடியார்
பத்திக் கணங்கண வேகம்பத் தாய்பத்து முற்றுகருப்
பத்திக் கணங்கணங் கெய்தலென் றன்னைபண் பாகியென்று
பத்திக் கணங்கண பாதவிர்த் தாண்டருள் பாலிப்பையே. கசு

பாலிக் குமரிக்குந் தாணிழல் வெப்பம் பணிமொழியாற்
பாலிக் குமரிக்கு மாறுசெய் வார்படிந் தாடிடத்தன்
பாலிக் குமரிக் குடிஞைக்கு மெய்தரும் பாக்கியங்கொள்
பாலிக் குமரிக்கு வாழ்வான கச்சிப் பதிக்கம்பனே. கஎ

பதிகம் பரம்பரர்க் காவது காஞ்சி பணிபணியென்
பதிகம் பரம்பர சாயுத மாம்பத்தி செய்பவரேற்
பதிகம் பரம்பர வுந்தொடை மூவர் பகர்ந்தருளும்
பதிகம் பரம்பர மானந்த மேயுருப் பார்ப்பவர்க்கே. கஅ

பவனன கன்றலை வன்காஞ்சி வாழ்பழங் கம்பமெனும்
பவனன கன்றலை ஞாலமெ லாந்தொழப் பட்டகடம்
பவனன கன்றலை வற்றநெஞ் சோர்வினைப் பஞ்சினுக்கின்
பவனன கன்றலை மாலைய னென்றென்று பாடுதுமே. கள

பாடலம் போது நிறைசிவ கங்கை படிந்துநித்தம்
பாடலம் போது தொறுமீசன் கம்பன் பரனெனும்வாய்
பாடலம் போது குழல்விழி நாலெண் பகுப்பும்வளர்ப்
பாடலம் போதுத மென்னேமெவ் வாறருள் பற்றுதுமே. கஅ

மேத கரக்கருந் தேவரும் யாவரும் வேட்கும்பரி
மேத கரக்கரு மன்பருள் வாய்வெண் டரளம்பொன்கோ
மேத கரக்கருந் துன்றிய காஞ்சியின் மிக்ககம்ப
மேத கரக்கருங் கூந்தலு நீயும் விரும்பினையே. ககூ

விரும்பா வலருடம் பாய்மங்கை மார்கொங்கை மெல்லிதழ்க்க
விரும்பா வலருடங் கும்படி கேண்மன மேயச்சந்த
விரும்பா வலருட ஞர்த்தழை வேய்ந்தவ மெய்யறிவ
விரும்பா வலருடங் கேத்துகம் பாவென்று வேண்டுவையே. ௨௰

வையம் பணிசிலை வேதற்குன் பாலினி வாழியென்றுன்
வையம் பணிசிலை தென்காஞ்சி காற்றனன் மாலென்பறம்
வையம் பணிசிலை வாழிட மீர்க்குவட் காரைவெல்லும்
வையம் பணிசிலை யேறுகக் கொண்டு வளர்கம்பனே. ௨௧

கம்பரந் தாதி நிலம்வலென் றுதி களங்கண்முகங்
கம்பரந் தாதியை கஞ்சமன் ஞன்பங்க னேமுத்தியே
கம்பரந் தாதிருப் பூங்கொன்றை யோடென்புங் கட்டியென்சொற்
கம்பரந் தாதியுங் கைக்கொண்ட வாகச்சி காவலனே. ௨௨

வலங்கொடி யானத்தன் பாளர்கள் சூழ்செந்நின் மாநகர்ச்சே
வலங்கொடி யானந்த ஞங்காமக் கோட்டி மணுளனேகா
வலங்கொடி யானத்தன் போலானென் றேத்தல்செய் வாஙிவரிக்க
வலங்கொடி யானத்தன் மன்வாத னையை மருவலமே. ௨௩

வலமாயக் கண்ட காளவென் றேத்திடின் வல்வினைய
வலமாயக் கண்டகத் தேகுடி கொண்டு மாக்களைய
வலமாயக் கண்டகத் தான்பானு வாநின்று வாழ்வித்திடும்
வலமாயக் கண்டக ருரெரித் தேகம்பம் வாழ்முதலே. ௨௪

முதலையை யாவி கரந்திபக் காத்தவன் மொய்மலர்த்தாண்
முதலையை யாவிக வானஞ்சு மாடி முழுமலர்விம்
முதலையை யாவி கமழ்கஞ்ச ஞடவு முற்படுமெம்
முதலையை யாவி கலனையென் ஞண்ட முறைகம்பனே. ௨௫

பன்னந் தனவன மாக்கேங்கம் பன்பழை யோனெனும்பேர்
பன்னந் தனவனப் பிறகழி வேம்பசுந் தாமரையின்
பன்னந் தனவனம் போற்பற்ற றேமெப் படிகொல்வெள்ளி
பன்னந் தனவனம் போதனெய் தாப்பதஞ் சார்வதுவே. ௨௬

சாறுவ தீர்த்த நறுநீரி லேகம்பர் தாமுலவுஞ்
சாறுவ தீர்த்தனென் றேத்திடு மேதியைத் தண்கருப்பஞ்
சாறுவ தீர்த்தலைக் குங்காஞ்சி காசி கமலைதண்கஞ்
சாறுவ தீர்த்தவொப் பின்பெயர் நீங்கிடச் சார்மனமே. ௨௭

மனவகங் கைக்கனத் தானனற் போற்றி மறுக்கவெய்யா
மனவகங் கைக்கனற் காரற் குமைக்கு மகவைத்தொழ
மனவகங் கைக்கனக் கோனன்பர் தாடொழ வைத்திகம்ப
மனவகங் கைக்கனத் தார்முத்தஞ் சேர்கச்சி வானவனே. ௨௮

வானங் கலைகட லாய்ப்பரந் தான்வன் கரிகரக்க
வானங் கலைகட வாநடஞ் செய்கச்சி வாணன்பொன்னேர்
வானங் கலைகட மாவுரி யான்கம்ப மாவடிவாழ்
வானங் கலைகட னீதெனக் காட்டிவந் தாண்டனனே. ௨௯

ஆண்டவ னாரணன் கம்பனென் றேத்த வயன்சுரர்பல்
லாண்டவ னாரண னேடடி யேனும ணைந்திடிற்பே
ராண்டவ னாரணந் தீசன் கணங்களிவ் வாலயத்து
ளாண்டவ னாரண வுற்றானென் னாதுள் ளழைத்தருளே. ௩௰

உள்ளலை வாளை தலைப்படு மோடை யுடுத்தகச்சி
யுள்ளலை வாளைநன் னிலஞ்செங் காசுமிழ் கம்பத்தனே
யுள்ளலை வாளை யரிக்கண்ணி காம னுகுக்குமம்புக்
குள்ளலை வாளைய தார்க்கொன்றை யீந்தவ னுய்வண்ணமே. ௩௧

வண்ணஞ் சிவந்தவ ரேகம்பர்க் கார்மொழி வார்மறையின்
வண்ணஞ் சிவந்தவ மானார் பிரான்முடி வாழ்மதிக்க
வண்ணஞ் சிவந்தவ மேயீர வாடிநன் மாமைகெடும்
வண்ணஞ் சிவந்த வநங்கனுக் கேங்கி வருந்துவதே. ௩௨

வருந்தலை வாமன னேமதன் சாபம் வணக்கியெய்ய
வருந்தலை வாமன னேயய னேமற்றை வானவர்யா
வருந்தலை வாமன னேகம்ப னென்னுமெம் மான்கரந்தை
வருந்தலை வாமன னேகனு தற்கணை வாழ்த்துதியே. ௩௩

துதிகான னந்தலை யேகம்ப வாழ்வையக் தோமிக்கிரங்
துதிகான னந்தலை மூன்றான ரைத்தொழூந் தேவெனவாழ்த்
துதிகான னந்தலை நீர்த்தடந் தீத்தன்மை குளையருந்
துதிகான னந்தலை யாம்பதியென் றெண்ணிச் சூழ்மனனே. ௩௪

மனமாலை யாற்ற வலைகடல் வீர மடியநல
மனமாலை யாற்ற னலியத் தருமன் மதன்மதச
மனமாலை யாற்றண் ணளிசுரந் தாள்கச்சி மாநகர்க்கு
மனமாலை யாற்றவ னேகம்ப மேவிய வான்பொருளே. ௩௫

பொருந்தங் குமரிக் குறும்பற் றிருவர் புகழ்சிவந்தாய்
பொருந்தங் குமரிக்கு முள்ளே வினையென்று போய்க்கம்பமே
பொருந்தங் குமரிக்குங் காறு மமர்பொன்னி சானவிதண்
பொருந்தங் குமரிக்கு மேலாங்கம் பைப்புன லாடுநெஞ்சே. ௩௬

சேய ரியம்பக மானே பொருள்வயிற் சென்றவர்தாஞ்
சேய ரியம்பக வார்த்திடுங் கார்வரிற் செய்வதென்னாஞ்
சேய ரியம்பக வற்றீங் கெனாச்சிறுத் தொண்டர்தந்தஞ்
சேய ரியம்பகம் பாவென்றென் றேத்துந் திறனல்லதே. ௩௭

அல்லாக் குமாரணங் குற்றுயிர்த் தேங்கு மருள்பொறைதை
யல்லாக் குமாரனன் னாரு ளாரென்னு மம்பகலை
யல்லாக் குமார மடர்கச்சிக் கம்ப ரருட்குரிய
னல்லாக் குமாரனை யின்பய னீதென்னு மாயிழையே. ௩௮

ஆயா திருக்கச்சி யேகம்ப நின்னடி யார்க்கடியே
னாயா திருக்கச் சிவமென்ப தென்றதை யாய்ந்துமற்றோன்
றாயா திருக்கச்சி தானந்த மாயமர் வண்ணமளி
யாயா திருக்கச் சிதுந்த் தறிவுரு வாந்திருவே. ௩௯

திருக்காமக் கோட்ட முதல்விபங் காண்டருள் செல்வன்வினை
திருக்காமக் கோட்டம மாற்றிடுங் கம்பன் றிருந்தெழின்மு
திருக்காமக் கோட்ட மளித்தானென் றேத்திநந் தீவினைப்பி
திருக்காமக் கோட்ட முறும்பாம் பரைக்கசை தேவனையே. ௪௰

வனசத்த வன்புர வாளன வன்ம தியம்பசிய
வனசத்த வன்புர விப்பக லோனவன் மன்னுசத்த
வனசத்த வன்புரம் வென்றே னவனவ னேநலஞ்சு
வனசத்த வன்புர வோர்வாழ் கலிக்கச்சி வாழ்கம்பனே. ௪௧

கங்கணம் பன்னகஞ் சாந்தமு நீறு கருவொருபா
கங்கணம் பன்ன கருங்குழன் மேலரி கழுதுகழ
கங்கணம் பன்னக மேகம்ப மன்ப ரகங்கள்சிரங்
கங்கணம் பன்னக வில்லானுக் கோதக் கடவனவே. ௪௨

கடவாத வன்ப ருவராத வன்ப ரகந்தொறுஞ்சங்
கடவாத வன்ப ருவரா வினையிருட் கார்க்குவன்றேர்
கடவாத வன்ப ருவரா னுகள்கம்பைக் கம்பனலங்
கடவாத வன்ப ருவரா தளித்தெனைக் காத்தனனே. ௪௩

தனம்பொடி யாது முளையா தெயிறிந்தத் தையல்கம்பத்
தனம்பொடி யாதும் வளராப் பிறைமுடித் தானுக்கென்பா
தனம்பொடி யாதுதை சாந்த மெனுங்கொன்றை தந்திடின்ம
தனம்பொடி யாதுதை யாதென்னு மென்கட் டனித்துவந்தே.

வந்தனை யாவதுஞ் செய்தறி யாமன மேமறலி
வந்தனை யாவது பார்நர கென்னுமுன் வாய்த்திடுதே
வந்தனை யாவது செய்தார்க் கருண்மயி லூரருட்ப
வந்தனை யாவ துலாகம்ப னேயென்று வாழ்த்துவையே. ௪௫

வைகாத் திருப்பதி நாள்கோள் வழங்குங் கதிகளென்ற
வைகாத் திருப்பதி கைப்பதி காசிதன் மார்பமன்றி
வைகாத் திருப்பதி மாற்பேறு முன்வரைப் பாயினுஞ்செய்
வைகாத் திருப்பதி யான்கச்சி யேகம்ப மாவடியே. ௪௬

மாவடி வாயவ தாரஞ்செ யேகம்ப வாணர்கெடு
மாவடி வாயவம் பிஞ்சியி லேவிய மன்னர்புள்ளு
மாவடி வாயவர் காணாத ஞான வரோதயர்த
மாவடி வாயவந் தீர்சிந்தை யாரெம்மை யாள்பவரே. ௪௭

ஆனந்த வெள்ளம் புயத்தாள் பணிகம்ப வாணவத்தி
யானந்த வெள்ள மலவுடற் பார மறிவுமிகை
யானந்த வெள்ள வதியேனுங் கன்ம மடாதருப்பட்
டானந்த வெள்ளந் துளைந்தாட வைத்தி யருமணியே. ௪௮

மணிகண்ட வாதிரை சாளா னரன்கம்ப வாணனென்கண்
மணிகண்ட வாதினி தான்வோன் றனைப்புத்தர் வாமிகள
மணிகண்ட வாதியை வென் றுண்மை தேர்மன் வியாகரண
மணிகண்ட வாதி விபுதர்க ளொடொறும் வாழ்த்துமினே. ௪௯

வாரா ரிடைமரு மான்றெழு வேகம்ப மன்னிவளர்
வாரா ரிடைமரு ளாரார் தமதன்பர் மாருங்கொல்
வாரா ரிடைமரு விப்புகல் வேனிவ் வருத்தமந்தோ
வாரா ரிடைமரு ளப்பணை பூண்முலை மாதரசே. ௫௰

மாதேவ னீசர் மொழியாற் சிறுதெய்வம் வந்தித்துவிம்
மாதேவ னீசனுர் வேதங்க டாமன்று தற்புருடன்
மாதேவ னீச னெனவுரி யானவ னன்பர்கட
மாதேவ னீசலி யாதுசெய் யேகம்ப வைப்பிற்சென்றே. ௫௧

வைப்பது மத்த முடிமீது நாடக வர்க்கமெண்சு
வைப்பது மத்தக மேலது காட்ட மருவுகம்பம்
வைப்பது மத்த மறப்பது பார்வையப் பாகன்வெண்பா
வைப்பது மத்தனென் றுலென்னை யோநங்கை மால்கொள்வதே.

மாலை யடியடி கேண்முனர் தேடவைத் தாய்சமணு
மாலை யடியடி யென்னுமற் காத்து வளர்தருபா
மாலை யடியடி தோறுஞ் சுவைபெறப் பாடமையின்
மாலை யடியடி யோங்கட் கருள்கச்சி வாழ்கம்பனே. ௫௩

வாதங் கமண்டல நீரழ லாய்க்கம்ப மன்னிநின்ற
வாதங் கமண்டலம் பாயுறி போய்வன் கழுப்பொருந்த
வாதங் கமண்டலத் தார்செய்ய வென்றவர் வாழ்த்துமத்தா
வாதங் கமண்டல மூன்றுங் கடந்தென் மனத்தகத்தே. ௫௪

அகத்திய னாதன் பூவிற்கு நாசி யரிந்திடுசெய்
வகத்திய னாத வத்தியென் னாதறுத் தான்முதலோ
ரகத்திய னாத னாற்றொழுங் கம்ப ரறிவிற்செம்போ
தகத்திய னாத மர்க்கொளித் தேமன்றி லாடுவரே. ௫௫

ஆடானை யம்பல மேயானைக் கம்பனை யன்பிலர்பா
லாடானை யம்பல மீவானைக் கண்டன ளாகிமங்கை
யாடானை யம்பல கொண்டுசென் றாளங்க னேநெகிழ்ந்த
தாடானை யம்பலந் தோவெங்கு மாய தலர்த்திருவே. ௫௬

திருமேற் றளிவளர் கம்பன் பனியுந் திண்கோடையுங்கூ
திருமேற் றளியுடன் செய்தவத் தோர்க்கிறை சிரெழின்மு
திருமேற் றளிமுரல் கொன்றையன் றாள்சிந் தியார்சமன
திருமேற் றளிவிட வேறே துறுதி திருத்துவரே. ௫௭

திருவோண காந்தன் றளிவள ரேகம்பன் சீர்க்கருக [கண்ட
திருவோண காந்தன்றன் கோன்வரைப் பாற்சென்றி யான்முன்
திருவோண காந்தனி பேசா மெனுந்திண் விரதத்தின்மு
திருவோண காந்தம் பிறிதொன் றொவ் வாணண்பிற் சீரியனே. ௫௮

அனேகதங் காவத மப்புக ழக்கம்ப வறுத்தருள்வா
யனேகதங் காவதம் பற்பல வோடி யலைந்துவறி
யனேகதங் காவதன் பால்வரைப் பாற்றவ மாற்றிக்கச்சி
யனேகதங் காவத னேயலை யாவகை நன்னெறியே. ௫௯

நெறிக்காரைக் காட்டு குழலார்பின் சென்றுநிற் பீருயிர்போ
நெறிக்காரைக் காட்டுவிர் கம்பனுக் காலையி னேர்ந்தநெறு
நெறிக்காரைக் காட்டுப்பள் ளிக்கோவுக் கன்பு நிகழ்த்திக்கச்சி
நெறிக்காரைக் காட்டுச்செல் லீர்துனை யாவரு நீர்மையரே. ௬௰

மையானப் பதிவளர் கச்சிப் பிரான்வரு மேறெனுந்தன்
மையானப் பதியினை யூர்ந்தரு ளேகம்ப வாணனிள
மையானப் பதிரன் னிலாநீந்து வேணி மௌலியன்க
மையானப் பதினைந்து மூவேழு நீக்க வரந்தருமே. ௬௧

தருமந் தரதமந் தேர்கல்வி வேட்டுத் தரையினுருத்
தருமந் தரதமங் கெய்தா ரெனுஞ்சொற் றனைக்கம்பம்வாழ்
தருமந் தரதமர்க் கெட்டார் வரைதனிற் கைபுயமார்
தருமந் தரதமக் கூர்தற்கு நீசென்று சாற்றுகவே. ௬௨

கவளக் கரியன்று வென்றூரன் பாற்சொன்ன கட்டுரைக்காங்
கவளக் கரியன்று கொல்லாமித் தெய்வங் கனையிருளாங்
கவளக் கரியன்று தந்தநஞ் சுண்டிருள் கண்டனென்று
கவளக் கரியன் றுறைசூழ்கம் பன்வரைக் காரிகையே. ௬௩

காரியங் காரண மாம்பஞ்ச பூதக் கலப்பின்மயங்
காரியங் காரணங் கெய்தா வகையருள் காட்டுமலி
காரியங் காரணஞ் சூழ்கம்ப னூரல்லுங் காய்பகலுங்
காரியங் காரண வோசையைக் காட்டுங் கலிக்கச்சியே. ௬௪

கச்சித் தெருவில்வந் தார்நெகிழ்த் தாரென் களபமுலைக்
கச்சித் தெருளினர் யாவரென் பேற்குக்கல் லாலமர்யோ
கச்சித் தெருநினை யூருஞ் செயுங்கன்னல் கல்விபந்துய்க்
கச்சித் தெருவை யுறுஞ்சூல மேந்திடுங் காணனென்பரே. ௬௫

பராரை வரைவரை போல்வளைக் குங்கம்ப ரைத்திருவம்
பராரை வரைவரை யோவறி யார்பன் னெடுங்கணைக்கும்
பராரை வரைவரை யத்தெரி யார்படித் தோரிற்செம்மாப்
பராரை வரைவரை யிட்டொழிப் பாரவ் விதண்டையர்க்கே. ௬௬

தண்டக நாடக மாடுமெந் தாய்தண் குறங்கரம்பைத்
தண்டக நாடக லல்குல்பங் காபொற் றடவரைக்கோ
தண்டக நாடக ராதிமண் காற்றங்கி தண்புனலாந்
தண்டக நாடகம் வாழ்கம்ப னேநின் சரண்சரணே. ௬௭

சரமைந் தனங்க னொருங்கேவு முன்கொன்றை தந்திருட்குஞ்
சரமைந் தனங்கண் மெலியச்செய் யார்பொய்மை சாற்றுபரா
சரமைந் தனங்கணை போற்றியென் ரேத்தக்கை தந்தருளீ
சரமைந் தனங்கண் மகிழ்கம்பை சூழ்கம்பஞ் சார்ந்தவரே. ௬௮

தவந்தானங் காலந் தொறுமற வார்தங்கு கச்சியினெய்
தவந்தானங் காலன் றிறல்வாட்டு கம்பன்றன் வெற்பினர்கை
தவந்தானங் காலந் தருமென்செய் கேன்சந்தக் குன்றினும்வந்
தவந்தானங் காலன்பி லாமதன் றானும் வருத்துவனே. ௬௯

வரகந்த மாதன வாழ்வோ ருணற்குமற் றின்பம்விற்ப
வரகந்த மாதன மாயதென் னேகம்பர் மைந்தமெய்த்த
வரகந்த மாதன வள்ளிகொண் காவென்று வாழ்த்தவருள்
வரகந்த மாதன வெற்பாளர் போலுநம் மன்னவர்க்கே. ௭௰

மன்னுத போதனர் வாழ்கம்ப வாணனின் வான்கருணை
மன்னுத போதன காபுக லேதென்முன் வந்துதரு
மன்னுத போதன தாநர கார வருந்துகென்னு
மன்னுத போத னரியறி யாதமெய் வாழ்வருளே. ௭௧

வாவிக் கமலத் தடவானை மாங்கனி வாய்கிழித்து
வாவிக் கமலச் சுவைதேக்கி நீந்தும் வணகச்சிக்கம்பா
வாவிக் கமலக்கு நாச்செற்றுக் காலன்வந் தெய்துமுன்ன
வாவிக் கமலத் துணைத்தாடந் தாட்கொள வல்விரைந்தே. ௭௨

வல்லியங் கோட்டு மலைதிரி கானிருள் வாய்வருவான்
வல்லியங் கோட்டுவில் லார்மொழி வார்மலை யீன்றமுலை
வல்லியங் கோட்டுநன் னீர்க்கம்பை வாய்த்தழு வக்குழைந்தார்
வல்லியங் கோட்டே னூர்த்தெழு மேகம்பம் வாழ்வரைக்கே. ௭௩

வரையும் வரையுமுள் வாடா திருந்த தடியவர்யா
வரையும் வரையுமவ் வேட்டன்பர் பார்த்திவ னூரிவனை
வரையும் வரையுமென் னுதெனைச் சேர்த்து வரையுங்கம்பர்
வரையும் வரையுந் திடமுமுள் ளார்தந்த மாந்தழையே. ௭௪

மாந்தரு மங்கல வாவிட மாந்தியவ் வானவரு
மாந்தரு மங்கல ரிட்டேத்த வாழ்கம்ப வாணனொற்றை
மாந்தரு மங்கல வைப்பாக்கொண் டானடி வாழ்த்துபுவிம்
மாந்தரு மங்கல மாகக்கொள் ளாம்வம்பின் மாழ்குதுமே. ௭௫

மாவலி யேவலை யாப்பகை மீன்களை மாட்டிமண்மேன்
மாவலி யேவலை மாற்றினன் ரூழ்கம்ப மஞ்சுனரோ
மாவலி யேவலை நோக்கியங் காமகன் பெண்ணெனுநா
மாவலி யேவலை யேகொடி யென்வினை மாய்த்திடவே. எசு

வேதனை வாய்ப்பணி வுற்றவ மேமெலி வேறுமுற
வேதனை வாய்ப்பணி யார்கம்பத் தேவெளி நின்றுவிண்டு
வேதனை வாய்ப்பணி செய்துமெட் டாதெங்கு மேவுசம
வேதனை வாய்ப்பணி யான்றடுத் தாண்டனன் மேதகவே. எஎ

தகரங்கந் திக்குங் குழலா யினியுயிர் தாங்கெனுஞ்சொற்
றகரங்கந் திக்கு மருள்வா ரலர்தப னன்றனைச்சேர்
தகரங்கந் திக்கு முகனைக்கொய் கம்பர் தடவரைப்போ
தகரங்கந் திக்கு மரம்போற்கொல் யானைத் தனிமன்னரே. எஅ

தனித்தன மேயன்பர்க் காகிநின் றேன்றமிழ்க் கச்சிக்கம்பத்
தனித்தன மேயன்ப ராசத்தி பூசனை கொண்டபுனி
தனித்தன மேய பசப்பொழி யான்மற்றொர் சார்புமில்லேர்
தனித்தன மேயன மேயினி யேதுய்யத் தக்கதுவே. எகூ

வேதாக மங்கலை கற்றத னுன்முத்தி வேட்பதறி
வேதாக மங்கலை நீர்போக்கு மேவியன் பத்திவிளை
வேதாக மங்கலை மாமதி வேய்ந்தவெண் ணீற்றொளிச்ச
வேதாக மங்கலை யாத்திசை கொண்டமெய் யேகம்பனே. அ௦

ஏகம்பத் தானை யரிதிசை யூர்புக ழேறகச்சி
யேகம்பத் தானை யுரிபோர்வை வாழிடஞ் சூதமதா
மேகம்பத் தானை யுகைத்தடி யார்க்கெளி வந்தருளு
மேகம்பத் தானை யரிக்கண்ணி பாகனுக் கென்பர்களே. அக

பரம்பர மானந்த வாதவர் சூழ்கம்ப னேயிம்பரும்
பரம்பர மானந்த மாநிறைந் தோய்பசுஞ் சாபக்கரும்
பரம்பர மானந்த மொத்தகண் ணார்திறம் பாறவெங்கும்
பரம்பர மானந்த முத்திதந் தாண்டருள் பாலிப்பையே. அஉ

பாலனஞ் செய்துத வார்கொன்றை மாலைதன் பாசடைமேற்
பாலனஞ் செய்துறு தென்கச்சி யேகம்பர் பானுவுமேற்
பாலனஞ் செய்துதல் போலெய்து மாலையின் பைந்துளவோன்
பாலனஞ் செய்துகொல் வானென்றென் றேங்குமென் பான்மொ
[ழியே. ௮௩

பாதக மஞ்சன வெற்பாக வீட்டொற் பண்புவிரும்
பாதக மஞ்சன மாட்டாது கைபன்னு நாப்புகழ்செப்
பாதக மஞ்சன கண்டாகம் பாபன்றி நாடரிய
பாதக மஞ்சன மின்னமுய் காணரும் பண்ணவனே. ௮௪

வனப்புண் டரிக முகத்தார்த முற்பல மாமலரின்
வனப்புண் டரிகவர் கண்விரும் பேல்வணங் காயுரைசெய்
வனப்புண் டரிகல வாமல ருண்டுவெண் கம்பமுண்டு,
வனப்புண் டரிக வுரியானுண் டேமனம் வாய்கையுண்டே. ௮௫

கைத்தா யினையகன் றுயமும் யானுங் கவலமறு
கைத்தா யினைய வருகாலன் போலுமோர் கண்டகன்றன்
கைத்தா யினையவென் கண்மணி யேகக் கடவியெனைக்
கைத்தா யினையநற் கம்பந் தொழாரிற் கடுந்தெய்வமே. ௮௬

கடமாதங் கம்பப் பிரானைச் சிவநிசிக் கண்வணங்கிற்
கடமாதங் கம்பற் பலசூழ வாழ்ந்தங்குக் கஞ்சர்கண்ணர்
கடமாதங் கம்பணி யாப்பூண்டு வைகிப்பின் கார்மலச்சங்
கடமாதங் கப்பற் றறப்போய்க் கலப்பர் திருவடியே. ௮௭

திருக்கோவை யாரண னைப்படைத் தேகம்பத் தேமகிழ்வோய்
திருக்கோவை யாருளத் தோரன்பர் கூறிடச் சிற்றம்பலத்
திருக்கோவை யார்கரத் தால்வரைந் தாண்டசெல் வாவருள்கூ
திருக்கோவை யார்படை வேட்கோவின் றூற்றுமென் சேல்விழியே.

விழுமந்த வாதவர் சார்பே நயந்து விவேகங்கள்
விழுமந்த வாதவ வேனோர் மதங்களை மேற்கொண்டங்கண்
விழுமந்த வாதவ மென்றுமை காட்டி விளக்கினைநல்
விழுமந்த வாதவர் வெற்பாகம் பாவென் விளம்புவனே. ௮௯

புவனம் பவனங்க மண்ணழ லாவன்புள் ளூர்களர்காம்
புவனம் பவனங்க ளாவமர் வோன்வினை பொய்மலந்த
புவனம் பவனங்க ணன்கம்ப னென்றென்று போற்றிவிரும்
புவனம் பவனங்க னத்தனென் றேகொண்ட போதனையே. கம

போது மினையம்ப ரோடவா றிங்கும் பூம்பகழிப்
போது மினையம் பரத்தைப் பொருமிடை யார்வசையும்
போது மினையம் பரிகம்பர் தார்புரிந் தாரினியோர்
போது மினையம் பரவையின் வீரமும் பொன்றுகவே. கக

கவலைக் கரும்பர வப்பூம் பகழிக்குங் கன்னியர்நோக்
கவலைக் கரும்பர வேர்நகை யல்குலுக் காசைகொண்டு
கவலைக் கரும்பர வைக்குள் விழாது கருணைபெரு
கவலைக் கரும்பர மானந்த மீந்தனன் கம்பத்தனே. கஉ

கம்பாகம் பாநதிப் பாற்பூசை செய்சவு ரிக்கருளேக்
கம்பாகம் பாலித்த கோவே மகளிர் கடிதடநா
கம்பாகம் பாமொழி கண்களென் றுதன் கழலைமுறுக்
கம்பாகம் பாக முறுந்தமிழ் பாடுங் கடன்பணியே. கங

பணியா தனந்தம் பரிசடி யாரெதிர்ப் பட்டிடிற்செய்
பணியா தனந்தன் புகழுமிற் பீரென்று பாடிப்புத்தி
பணியா தனந்தர் துபசரி யாதுகம் பாவரவப்
பணியா தனந்தஞ்ச மென்றழி வேனெப் படியுய்வனே. கச

குறிப்பு: இவ்வந்தாதியிலே காப்பும் முதலிறுதிகளில் ஆறு செய்யுட்களும் இறந்துபோயின.

திருவேகம்பரந்தாதி

அருஞ்சொற்பொருளகரவரிசை

அசை-உடுக்கும், சய
அணங்கு-துன்பம், கச
அணவும்-கலக்கும், கச
அதுலா-ஒப்பில்லாதவரே, சரு
அம்பகம்-கண், ஙஎ
அம்பு-நீர், கூ
அரந்தைப்படும்-துன்பப்படும், அ
அரன்-அரிப்பவன், சகூ
அரிக்கும்-கெடுக்கும், கரு
அல்-இருள், கஅ
அல்லாக்கும்-துன்பமடையும், ஙஅ
அலத்தகம்-செம்பஞ்சு, கக
அலர்-பழிமொழி, உய
அவதி-அளவு, சஅ
அவிரும்-விளங்குகின்ற, உய
அளி-வண்டு, ருஎ
ஆ-உயிர், சய
ஆத-அறிவில்லாதவனே, எக
ஆதங்கம்-பொல்லாங்கு, அஎ
ஆம்-நீர், சய
ஆய்-தாய், ஙகூ
ஆரம்-முத்து, ஙஅ
ஆவலி-ஒழுங்கு, எகூ
இஞ்சி-மதில், சஎ
இயம்-வாச்சியம், கூச
ஈர-பிளக்க, ஙஉ
உக்காம்-உதிர்ந்ததாம், சய
உகைத்து-நடத்தி, அக
உயிர்த்து-மூச்சுவிட்டு, ஙஅ
உரவோர்-அறிவில் உரமுடையோர்; 'விரதிகள்' சக
உவராத-வெறுக்காத, சங
உள்ளல் ஒருவகைமீன், ஙக
எய்யாமல்-இளையாமல், உஅ
ஐ-தலைமை, எ; அழகு, எரு
ஓடை-குளம், ஙக
கங்கணம்-கைவளையம், சஉ
கஞ்சம்-தாமரை, உஉ
கட்டு-களைந்து, கக
கடவும்-நடத்தும், சங
கடன் முறைமை, உகூ
கடி-நாற்றம், அ; திருமணம், அ
கதம்-வலிமை, ருகூ
கந்திக்கும்-மணக்கும், எஅ
கம்-நீர், உ; வான், உஉ; தலைமை, உஅ
கம்பு-சங்கு, உஉ
கமை-பொறுமை, கூக
களம்-நஞ்சு, உச
கரு-பெருமை, க
கவான்-தொடை, உகூ
கழுது-பேய், சஉ
கழுமல்-துன்யம், கக
களபம்-சந்தனம், கூரு
களம்-கழுத்து, உஉ
கனை-செறிந்த, கூங
கா-சோலை, சகூ
காம்புவனம்-திருநெல்வேலி, கூய
கார்-பெருமை, கூச

கானம்-இசை, ௩௪
து·கிலம், ௭௨
குடிஞை-ஆறு, ௧௫
குமரி-அழிவில்லாத, ௩௯
குவலையம்-குவளைப்பூ, ௪
கூதிர்-குளிர்காற்று, ௮௮
கேதன்-ஒளியையுடையவன், ௯
கை-ஒப்பனை, ௨௮
கைத்தாய்-செவிலித்தாய், ௮௯
கோட்டம்-குளம், ௪௰
கோள்-வலிமை, ௪
சாறு-திருவிழா, ௨௭
சில்-சிறிது, ௨௧
சிவம்-இன்பம், ௮
சூளை-வேசி, ௩௪
செய்-கழனி, ௧௨
தகரம்-மயிர்ச்சாந்து, ௧௯
தஞ்சு-பற்றுக்கோடு, ௩௭
தமம்-இருள், ௪௰
தவன்-தலைவன், ௩௰
துவா-நீங்காத, ௨௧
தீருக்கு-மாயை, ௪௰
துதை-செறிந்த ௪௪
துறு-நெருக்குகின்ற, ௮௩
நயல்-அழகு; ௯௮
நேயம்-நீர், ௩
நக-போல, ௧௭
நகை-யானையின் கொம்பு, ௫
நத்தன்-சங்கேந்திய திருமால், ௨௩
நனந்தலை-நடு, ௯௪
நாம்-நாமம், அச்சம், ௰
நார்-அன்பு, ௫௫
பக பிளக்க, ௩௭
பகழி-அம்பு, ௧௨
பணி-பாம்பு, ௯; பாம்பு, ௧௯; பூண், ௧௪.

பணை-பருத்த, ௫௰
பாவாது-வழிபடாது, ௧௩
பன்-நெருங்கிய, ௪௨
பன்னம்-சொல்லேலம், ௨௯
பா-அழகிய, ௨௰
பாசடை-பச்சிலை, ௮௩
பாடலம-பாதிரி, ௧௮
பிதிர்-பொடி, ௪௰
புரவாளன் - காக்குந் திருமால், ௪௧
பொடியாது-அரும்பாது, ௪௪
பொன்றுக-அழிக, ௧௧
மஞ்சு-அழகு, ௭௯
மணவு-சங்குமணி, ௨௮
மாதங்கம்-மதம் பிடித்த யானை, ௮௭
மாமை-அழகு, ௪
மால்-மயக்கம், ௩௫
மாழ்குதும் - மயங்குகின்றோம், ௭௫
மே-மாட்சிமை, ௭௭
மை-குற்றம், ௫௩
மோய்-செறிந்த, ௨௫
ய-உயிர், ௨௪
வட்கார் பகைவர், ௨௧
வரையும்-திருமணஞ் செய்து கொள்ளும், ௭௪
வல்லியம்-புலி, ௭௩
வனம்-நீர், ௨௯
வாமன்-அழகன், ௩௩
வியன்-பெருமை, ௯
விழுமம்-துன்பம், ௮௯
வை-கூர்மை, ௧௨; நுனி, ௨௧
வைப்பு-எல்லை, ௫௧